## Hutch தானசாலை வழங்கிய இலவச Data!

வெசாக் பண்டிகைக் காலத்தில் 'மற்றையவர்களுக்கு கொடுத்து உதவவேண்டும் என்ற உணர்விற்கு' உண்மையாக மதிப்பளிக்கும் வகையில் மொபைல் தொலைபேசி சேவைகள் நிறுவனமான Hutch, இலங்கையில் முதன்முறையாக 'data' தானமாக கொடுக்க ஏற்பாடு செய்து, Hutch data வாடிக்கையாளர்களுக்கு தனது 3G வலையமைப்பின் மூலமாக 100 MB data இனை இலவசமாக வழங்கியிருந்தது.

இணையத்தளத்தில் தனது டிஜிட்டல் ஊடக தளமேடைகளின் மூலமாக மட்டுமே முன்னெடுக்கும் வகையில், இந்த தனித்துவமான data தானசாலை நிகழ்வை Hutch ஆரம்பித்திருந்தது. இதன் மூலமாக தனது வாடிக்கையாளர்களை அவர்களது நண்பர்கள் மற்றும் அன்பிற்குரியவர்களுக்கு சமூக ஊடக தளங்களின் மூலமாக செய்தியைப் பகிர்ந்துகொள்வதை ஊக்குவித்து, அதன் மூலமாக இச் சலுகையை அவர்கள் பெற வழிவகுத்திருந்தது.

இந்த Hutch Data தானசாலை மே 2 ஆம் திகதி சனிக்கிழமையன்று இணையத்தளத்தின் மூலமாக ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், தொடர்ந்து 4 நாட்களாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இத்தானசாலை இடம்பெற்ற 4 நாட்களில் இலவச data இனை பெற்றுக்கொள்வதற்கு 38,000 இற்கும் மேற்பட்டவர்கள் தானசாலைக்கு இணையத்தளத்தின் மூலமாக விஜயம் செய்திருந்தனர். இதன் மூலமாக Hutch வாடிக்கையாளர்களுக்கு 3,800,000 MB இற்கும் மேற்பட்ட data இலவசமாக வழங்கப்பட்டது.

*''இந்த **"HUTCH DATA தானசாலை"** முன்னெடுப்பிற்கு எமது வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற மகத்தான வரவேற்பையிட்டு நாம் மிகவும் உற்சாகமடைந்துள்ளோம். 3G மொபைல் தொலைபேசி சேவைகள் வழங்குனர் என்ற வகையில் நாடெங்கிலுமுள்ள எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இந்த வெசாக் காலகட்டத்தின் போது தனித்துவமான ஒரு வெகுமதியை வழங்கவேண்டும் என நாம் விரும்பினோம். இணையத்தளத்தின் மூலமான இந்த தானசாலை நாம் அதனை வழங்குவதற்கு எமக்கு இடமளித்துள்ளது. இந்த தனித்துவமான வெகுமதியை எமது வாடிக்கையாளர்கள் அனைவரும் போற்றியுள்ளதுடன், மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டுள்ளமையையிட்டு நாம் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளோம்''* என்று HUTCH நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியான திரு. திருக்குமார் நடராசா அவர்கள் கருத்துத் தெரிவித்தார்.

**##முற்றும்##**

### Hutchison Telecommunications Lanka (Private) Limited நிறுவனம் தொடர்பான விபரங்கள்

இலங்கையில் மொபைல் தொலைதொடர்பாடல் சேவைகளை வழங்குவதில் முன்னிலையில் திகழும் ஒரு நிறுவனமான Hutchison Telecommunications Lanka (Private) Limited, "Hutch" வர்த்தகநாமத்தின் கீழ் தொழிற்பட்டுவருகின்றது. நாடளாவியரீதியில் அனைத்து மாவட்டங்களிலும் தனது சேவைகளை வழங்கிவருகின்ற இந்நிறுவனம் நியாயமான கட்டணங்களில் 3G மொபைல் புரோட்பான்ட் சேவைகளை வழங்கிவருகின்றது. Hutchison Telecommunications Lanka (Private) Limited நிறுவனம் Global Fortune 500 நிறுவனங்கள் பட்டியலிலுள்ள Hutchison Whampoa Limited ("HWL") குழுமத்தின் ஒரு அங்கமாகும். HWL குழுமத்தின் தொலைதொடர்பாடல் சேவைப் பிரிவு நவீன 3G தொழிற்பாடுகளில் ஒரு முன்னோடியாக உள்ளதுடன், ஐக்கிய இராச்சியம், இத்தாலி, அயர்லாந்து, டென்மார்க், அவுஸ்திரியா மற்றும் சுவீடன் உட்பட ஐரோப்பாவிலும், அவுஸ்திரேலியாவிலும், ஹொங்கொங், மக்காவு, வியட்னாம், இந்தோனேசியா மற்றும் இலங்கை உட்பட ஆசியாவிலும் தனது தொழிற்பாடுகளைக் கொண்டுள்ளதுடன்,

அனேகமான நாடுகளில் ‘3’ என்ற வர்த்தகநாமத்தின் கீழ் இயங்கிவருகின்றது. HWL குழுமம் மற்றும் Hutchison Lanka Ltd நிறுவனம் தொடர்பான மேலதிக விபரங்களை www.hutchison-whampoa.com மற்றும் www.hutch.lk மூலமாக அறிந்துகொள்ளலாம்.